# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
குற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129368

1. District : திருவாரூர் PS: V & AC Year: 2026 FIR No. 01/26 Date: 13.05.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : நாள் முதல் Date to : நாள் வரை 25.03.2026 @ 11.05.2026 @ 16.00 Hrs
குற்ற நிகழ்வு நாள்
Time Period : Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 18.05.2026 @ 14.00 Hrs
நேர அளவு

(b) Information Received at PS. Date : தானியேல் புகார் FIR Time நேரம் 13.05.2026 @ 12.30 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்

(c) General Diary Reference : Entry No(s) Time நேரம் 13.05.2026 @ 16.00 Hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக நேரிலையில் கடிதம் மையப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையுமிடப்படாது மனாம்பி அலுவலகம்
திருவாரூர் 4 km தெற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பாபுநாதன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o தொண்டமைகளும்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 61/26 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் பணைகள் (g) Address : முகவரி 4. தியேபிராசாத மடந் தெரு மடப்புரம் திருவாரூர் நகரம் திருவாரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
பதிகள் : 1. திரு. மயூரன் மடப்புர மனாம்பி அலுவலர் மடப்புர மனாம்பி அலுவலகம் : திருவாரூர்
2. திரு. தனபதி . உதவியாளர் மடப்புர மனாம்பி அலுவலகம் திருவாரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-**

திருவாரூர் உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால் ஆகிய நான் 13.05.2026-ந் தேதி மதியம் 12.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு. G.பாரதிதாசன், த/பெ ஞானப்பிரகாசம் என்பவர் திருவாரூர் உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- **அனுப்புதல்:** G.பாரதிதாசன் வயது 58/2026. த/பெ.ஞானப்பிரகாசம், 17. சிவப்பிரகாசமடத்தெரு, மடப்புரம், திருவாரூர் நகரம், திருவாரூர் மாவட்டம். **பெறுதல்:** உயர்திரு. துணை காவல் கண்காணிப்பாளர், உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். **அய்யா,** நான் திருவாரூர் நகரம், மடப்புரம், சிவப்பிரகாசமடத்தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஆக்டிங் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு கடந்த 2001ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டியை சேர்ந்த ராணி என்பவருடன் திருமணம் நடைப்பெற்றது. எனது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/5/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13.5.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. நந்தகோபால்.
Rank: நிலை DSP No: எண் [illegible]

**(குற்ற எண். 01/2026 FIR-ன் தொடர்ச்சி..,)**

மனைவிக்கு திருமணத்திற்கு சீராக எனது மாமனார் திருவாரூர் மாவட்டம், திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், கீழக்காவாதுகுடி கிராமம், புல எண்.144/3B-ல் போடப்பட்டிருந்த பிளாட்டுகளில் மனை எண்.7 (1944 ச.அ) மற்றும் மனை எண்.8 (1974 ச.அ) ஆகிய இரண்டு பிளாட்டுகளை எனது பெயரிலேயே வாங்கி ரிஜிஸ்டர் செய்து கொடுத்தார். அப்போது அம்மனைகள் DTCP அப்ரூவல் இல்லாமல் போடப்பட்ட மனைகள் ஆகும். தற்போது மேற்படி மனைகள் அமைந்துள்ள இடம் திருவாரூர் நகராட்சியில் சேர்க்கப்பட உள்ளதாக கூறப்பட்டு வருகிறது. அதனால் தற்போதே DTCP அப்ரூவல் வாங்கினால் கட்டவேண்டிய தொகை குறைவாக இருக்கும் என்பதால் மேற்படி மனைகளுக்கு DTCP அப்ரூவல் வாங்க ஏற்பாடு செய்தேன். அது தொடர்பாக நான் கடந்த 29.02.2024 இணையதளத்தில் ரூ.500/- செலுத்தி எனது மனைகளுக்கான DTCP அப்ரூவல் வேண்டி விண்ணப்பம் செய்தேன். 01.04.2024 அன்று DTCP அப்ரூவல் பெறுவது தொடர்பாக மேற்படி மனை பிரிவிற்கான கட்டமைப்பு வரைபடம் வழங்கி திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு என்னுடைய கோப்பு அனுப்பப்பட்டு விட்டதாகவும், மனை வரன்முறை படுத்துவது தொடர்பாக அரசுக்கு செலுத்த வேண்டிய உரிய தொகையை செலுத்திவிட்டு திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மனை வரையறை ஆணை பெற்றுக் கொள்ளுமாறு DTCP ஆபிசில் தெரிவித்தார்கள். அப்போது என்னிடம் கட்டணம் செலுத்த போதிய தொகை இல்லாததால் நான் மேற்கொண்டு நடவடிக்கை தொடராமல் இருந்தேன். பின்னர் கடந்த 27.02.2026-ஆம் தேதி திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சென்று மனை அப்ரூவல் பணிகளை மேற்கொள்ளும் பிரிவு அலுவலர் திரு.சுரேஷ் என்பவரை சந்தித்து கேட்டபோது மேற்படி மனைகளுக்கு மனை வரையறை செய்ய அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைகளின் விபரம் தெரிவித்து செலான் தயார் செய்து கொடுத்தார். அதன்படி Directorate of Town and Country Planning-க்கு மனை எண். 7 மற்றும் 8 ஆகியவற்றிற்கு 27.02.2026 அன்று ரூ.7,350/-, 24.03.2026 அன்று 500+500= ரூ.1,000/-, 25.03.2026 அன்று ரூ.19,130/-, மற்றும் கீழகாவாதுகுடி பஞ்சாயத்து கணக்கில் ரூ.9,120/- ஆன்லைன் மூலம் பணம் செலுத்தினேன். அதற்கான ரசீதுகளை கடந்த 25.03.2026 அன்று சுரேஷ் அவர்களிடம் வழங்கிவிட்டு எப்போது DTCP அப்ரூவல் கிடைக்கும் என்று கேட்டேன். அதற்கு சுரேஷ் அப்ரூவல்

வேண்டுமென்றால் எனக்கு ரூ.4,000/-மும், BDO-க்கு ரூ.4,000/-மும் லஞ்சமாக என்னிடம் கேட்டார். மேலும் என்னை அழைத்துக்கொண்டு BDO ரூமுக்கு சென்றார். அங்கிருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பிரகாஷ் என்னிடம் தனக்கு ரூ.4,000/- லஞ்சமாகவும், மனை வரையறை பிரிவு அலுவலர் சுரேஷ்க்கு ரூ.4,000/- லஞ்சமாகவும், கொடுத்துவிட்டு எனது மனைகளுக்கான மனை அப்ரூவல் ஆணைகளை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தார். அதன்பிறகு சட்டமன்ற தேர்தல் பணிகள் நடைபெற்றதால் நான் என்னுடைய மனை அப்ரூவல் தொடர்பாக உடனே அலுவலகம் சென்று மீண்டும் கேட்கவில்லை. தேர்தல் முடிந்த பின்னர் 11.05.2026-ந் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு மீண்டும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சென்று பிரிவு அலுவலர் சுரேஷ்-ஐ பார்த்து எனது மனை வரையறை ஆணையை கேட்டேன். அதற்கு நாங்கள் கேட்ட லஞ்சபணத்தை கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். பணம் இன்னும் தயார் செய்யவில்லை, பணத்தை குறைத்து கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு சுரேஷ் என்னை வட்டார வளர்ச்சி அலுவலர் அறையில் இருந்த BDO பிரகாசிடம் அழைத்து சென்றார். அப்போதும் என்னிடம் BDO எனக்கு ரூ.4,000/-ம் செக்சன் வேலை செய்யும் சுரேஷ் ரூ.4,000/- கொடுத்தால்தான் மனை அப்ரூவல் ஆணை கிடைக்கும் என்று மீண்டும் தெரிவித்தார். என்னால் மொத்த பணத்தையும் பொறட்ட முடியல, அதனால் தொகையை குறைக்கச்சொல்லி கேட்டு வரலாம் என்று 12.05.2026-ந் தேதி மதியம் சுமார் 2 மணியளவில் மீண்டும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சென்று பிரிவு அலுவலர் சுரேஷ்-ஐ பார்த்து மனை அப்ரூவல் ஆணையை தயாராகிவிட்டதா என்று கேட்டேன். அதற்கு நாங்கள் கேட்ட தொகை கொண்டு வந்துள்ளீர்களா என்று சுரேஷ் கேட்டார். பணத்தை குறைத்து கொள்ளுங்கள் என்று மீண்டும் கேட்டேன். அதற்கு சுரேஷ் உன்னோட ஒரே கரச்சலா இருக்கே என சொல்லிட்டு, அவருடைய செல்போனில் இருந்து BDO-பிராகாசுக்கு போன் செய்து விபரம் தெரிவித்தார். பின்னர் சுரேஷ், BDO என்னிடம் பேசவேண்டும் என்று கூறுவதாக சொல்லி அவருடைய செல்போனை என்னிடம் கொடுத்தார். நான் BDO-விடம் பணத்தை குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு BDO, பிரிவு அலுவலர் சுரேசுக்கான தொகையில் மட்டும் ரூ.1,000/- குறைத்து கொண்டு ரூ.7,000/-

(குற்ற எண். 01/2026 FIR-ன் தொடர்ச்சி...,)

கொடுத்துவிட்டு மனை வரையறை ஆணையை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தார். மனை அப்ருவல் ஆணை வழங்குவதற்காக திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலக பிரிவு அலுவலர் சுரேஷ் மற்றும் BDO திரு.பிரகாஷ் ஆகியோர் லஞ்சமாக கேட்ட ரு.7,000/- பணத்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. மேலும் மனை அப்ருவல் ஆணை கொடுக்க பல முறை என்னை அலையவிட்டதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். எனவே மேற்படி நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து கொண்டு, அவர்கள் லஞ்சமாக கேட்ட ரு.7,000/- பணத்துடன் 13.05.2026-ந் தேதி திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். புகாருடன் எனது மனைகள் 7 மற்றும் 8 ற்கான (ஆவண எண்.484/2000) பத்திரம் நகல்கள், மனை வரையறை தொடர்பாக அரசுக்கு தொகை செலுத்தியதற்கான ரசீது நகல்கள் ஆகியவற்றை கொடுக்கிறேன். என் புகார் தொடர்பாக சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd (XXXXXX) (G.பாரதிதாசன்) 13.5.2026. அய்யா, இன்று 13.05.2026-ந் தேதி 12.30 மணிக்கு வாதியிடம் இருந்து மேற்காணும் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகாரினை பெற்று ஒரு இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதில் புகாரின் தன்மை உண்மை எனவும் எதிரிகளின் நடவடிக்கையானது சர்ச்சைக்குரியது என்றும் ரகசிய விசாரணையில் தெரிய வருகிறது. எனவே 13.05.2026 ந் தேதி 16.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2026 u/s 7of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன் படி மேற்கண்ட எதிரிகள் 1. திரு.பிரகாஷ் BDO மற்றும் 2) திரு.சுரேஷ், உதவியாளர், BDO அலுவலகம், திருவாரூர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd (XXXXXX) (B.V.Nandagopal)13.5.2026 DSP, V&AC, Thiruvarur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

Deputy Supdt. of Police,
Vigilance and Anti Corruption,
THIRUVARUR.